# பங்கீட்டரிசி ½ கொத்துக்கு 10 சதம் அதிகரிப்பு

விலை சதம் 25 Registered as a Newspaper in Sri Lanka

ஈழநாடு

மலர் 16 The Eelanaadu இதழ்: 148

யாழ்ப்பாணம் ஆனி 27 ஜ. ஆண்டு 20 வியாழக்கிழமை 11-7-74

# யாழ். வளாகத்தில் பீலிக்ஸ் அக்கறை

யாழ்ப்பாணம், வியாழன் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவிருக்கும் பல்கலைக்கழக வளாகம் சம்பந்தமாக வடமாநில வித்தியாதிபதி திரு. ரி. மாணிக்கவாசகருடன் பொது நிர்வாக, உள்நாட்டு, [illegible] ராஜ்சி அமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா சுமார் அரை மணி நேரம் தனிப்படச் சந்தித்துப் பேசினார்.

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக வளாகம் அமைப்பதற்கு மந்திரிசபை முடிவு செய்துவிட்டதென்றும் அதைச் செயல்படுத்தி நிறைவேற்றுவதில் தொடர்ந்து செயல்படுமாறும் அமைச்சர் பீலிக்ஸ் திரு. மாணிக்கவாசகரிடம் தெரிவித்தார்.

பரமேஸ்வராக் கல்லூரி இம்மாதம் 12-ந் திகதியுடன் மூடப்படுகிறது. 15-ந் திகதி பல்கலைக்கழக நிர்வாகத்திடம் அது ஒப்படைக்கப் படவிருக்கிறது.

## கச்சதீவு ஒப்பந்தத்துக்கு தமிழ்நாடு கம்யூ. ஆதரவு

சென்னை, ஜூலை 10 இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே அண்மையில் செய்து கொள்ளப்பட்ட கச்சதீவு ஒப்பந்தத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாட்டுக் கிளை ஆதரித்துள்ளது. மதுரையில் நடைபெற்ற கட்சிச் செயற்குழுக் கூட்டத்தில் வலது கட்சி உறுப்பினர்கள் இதனை ஆதரித்தனர்.

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே நீண்டகாலமாக இருந்து வந்த பெரிய பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளதாகவும் செயற்குழு மகிழ்ச்சி தெரிவித்தது.

## புதிய உதவிமேயர்

யாழ்ப்பாணம், வியாழன் யாழ். மாநகராட்சிமன்ற உதவிமேயராக பாஷையூர் வட்டார அங்கத்தவரான திரு. ஏ. போல்ராஜா நேற்று ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். மேயர்குழுவினரின் முடிவுக்கு அமைய இவர் இரண்டுமாதகாலம் பதவி வகிப்பார்.

## ஆலயத்தில் பொலிசார் நடாத்திய சத்திய சோதனை

மாவிட்டபுரம், புதன் கடன்வாங்கி மோசடி செய்ததாக தம்மீது செய்யப்பட்ட புகார் பொய்யென்றும், தாம் கடன் வாங்கவில்லையென்றும் கூறி காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ள வைரவர் கோவிலில் சத்தியம் செய்தனர் மூன்று நபர்கள்.

மயிலிட்டியைச் சேர்ந்த த. இராசரத்தினம், அவர் மனைவி இ. பசுங்கிளி, அவர் மகன் இ. மகாதேவன் ஆகியோர் மயிலிட்டியைச் சேர்ந்த சி. மாசிலாமணி என்பவரிடம் 2,150 ரூபா கடனாக பெற்று திருப்பிக் கொடுக்காது மோசடி செய்ததாக காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டது.

இதையடுத்து மேற்படி நபர்களை அழைத்து காங்கேசன்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. வி. செல்லையா விசாரணை நடத்தினர்.

அச்சமயம் மேற்படி 3 பேரும் தம்மீது சுமத்தப்பட்ட முறைப்பாடு பொய்யெனவும், தாம் மேற்படி நபரிடம் கடன் பெறவில்லையென்றும், எந்தக் கோவிலிலும் இதுபற்றி தாம் சத்தியம் செய்வதாகவும் கூறினர்கள்.

இதையடுத்து காங்கேசன்துறை பொலிஸ்நிலையத்துக்கு முன் உள்ள வைரவர் கோவிலில் பொலிசாரின் முன்னிலையில் சமயாசார முறைப்படி தேங்காய் உடைத்து; கற்பூரம் கொழுத்தி சத்தியம் செய்தனர்.

## சீமெந்துக்கு இனி 'பெர்மிட்' தேவையில்லை!

மாவிட்டபுரம், புதன் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் பெர்மிட் எதுவுமின்றி இன்று தொடக்கம் சீமெந்து வழங்கப்படுகிறது.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் இவ்வரை காலமும் சீமெந்துக்காக விண்ணப்பித்தால் பல மாதங்களின் பின்பே அதற்கான பெர்மிட் வழங்கப்பட்டு அந்தப் பெர்மிட்டின் மூலம் சீமெந்து பெறக்கூடியதாக இருந்தது.

ஆனால் இன்று தொடக்கம் பெர்மிட் முறை நிறுத்தப்பட்டு சீமெந்துக்காக வரும் லொறிகள் யாவற்றுக்கும் தேவையான சீமெந்து வழங்கப்படவுள்ளது.

## விஞ்ஞான கணித ஆசிரியருக்கு ஆசிரிய பயிற்சி

யாழ்ப்பாணம், வியாழன் அண்மையில் நியமனம் பெற்ற விஞ்ஞான-கணித தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்களுக்கு 1975-ம் ஆண்டு ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது.

விஞ்ஞான-கணித ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்களின் நியமனம் குறிப்பிட்ட ஒரு தகைமைகளுடன் வழங்கப்பட்டது. பின்னர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை நியமனங்களுக்கு வேறு தகைமைகள் கோரப்படுகின்றன. இதனால் இவர்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகியிருந்தார்கள் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் அண்மையில் கல்வி அமைச்சிடம் புகார் தெரிவித்திருந்தது.

இதையடுத்தே 75-ம் ஆண்டு இந்த ஆசிரியர்களுக்கு ஆசிரிய பயிற்சிக்கலாசாலைகளில் பயிற்சி அளிக்க கல்வி அமைச்சு இணங்கியுள்ளது.

## தமிழ்நாடு முதல்வரை சந்திப்பார்

சென்னை, ஜூலை 10 இலங்கை தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. ஆர். எஸ். பெரேரா நாளைய தினம் தமிழ்நாடு முதல்வர் திரு. மு. கருணாநிதியை சந்திப்பார்.

திரு. பெரேராவும் துணைவியாரும் இன்று பெங்களூரிலிருந்து [illegible]

## பசளை மானியம் ரத்து நெல் கொள் விலை ரூ.33

கொழும்பு, புதன் பங்கீட்டரசியின் விலை அரைக்கொத்துக்கு பத்து சதம் என்ற அடிப்படையில் அதிகரிக்கப்படவுள்ளது.

இலவசமாக வழங்கப்படும் அரைக்கொத்து அரிசியைத் தவிர்ந்த மற்ற அரிசியின் விலையே இவ்வாறு அரைக் கொத்துக்கு பத்து சதம் என்ற முறையில் அதிகரிக்கப் படுகிறது.

### நெல்விலை

உத்தரவாத நெல் கொள்முதல் விலையை புசல் ஒன்றுக்கு 3 ரூபாவால் அதிகரிப்பதற்கும் அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி இப்பொழுது 30 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படும் ஒரு புசல் நெல்லுக்கு 33 ரூபாய் வழங்கப்படும்.

உரத்துக்காக வழங்கப்படும் மானியத்தை நிறுத்திவிடவும் அரசு முடிவு செய்துள்ளது.

பண்படுத்தப்படாத நிலங்களை பயிர்ச்செய்கை நிலங்களாக மாற்ற முன்வரும் நில உரிமையாளர்களுக்கு ஏக்கருக்கு ரூபா 500 வீதம் நன்கொடை வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

......

## முஸ்தபா பற்றி சுதந்திரக் கட்சி தீர்மானம்

கொழும்பு, புதன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிர்வாக உத்தியோகத்தர்களின் கூட்டம் இன்று கொழும்பில் நடந்தது. கட்சியில் சேர்வதற்கு விண்ணப்பித்துள்ள நிந்தாவூர் எம்.பி. ஜனாப் முஸ்தபாவை சேர்த்துக்கொள்வதென்றும் ஒரு வருட காலம் அவதானித்த பின் அவரை கட்சியின் நிரந்தர உறுப்பினராக ஏற்றுக் கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டது. பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.

## ஹார்டி கல்லூரி சம்பவம்: பூரணவிசாரணை நடக்கும்

கொழும்பு, புதன் கடந்த மாதம் 23-ம் திகதி அம்பாறை ஹாடி தொழில் நுட்ப கல்லூரி தமிழ்மாணவர் சிங்கள மாணவரால் தாக்கப்பட்டது குறித்து பூரண விசாரணை நடாத்தப்படவுள்ளது.

இத்தொழில் நுட்பக் கல்லூரியில் விரிவுரைகள் நடாத்தப்படவுள்ளதாகவும், தமிழ் மாணவர்களை வகுப்புக்கு வந்து கலந்துகொள்ளும்படியும் கல்விமா அதிபதி பிரேமதாசா உடகம கோரியுள்ளார்.

உடுப்பிட்டி எம். பி. திரு. கே. ஜெயக்கொடிக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் இத்தகவல்களை அவர் தெரிவித்துள்ளார்.

## "மக்களை புரிந்துகொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது"

யாழ்ப்பாணம், வியாழன் "வடபகுதி மக்களை நேர் நேராகச் சந்தித்து அவர்களைப் புரிந்துகொள்ளும் வாய்ப்பு எனக்குக்கிடைத்தது. சிறியவர்களையும், பெரியவர்களையும், முதலாளிகளையும், இன்னும் பலதரப்பட்டவர்களையும் சந்தித்தேன். அவர்களுடைய அன்பை, மனோ நிலையைப் புரிந்துகொண்டேன்''

இப்படி யாழ்ப்பாணத்தை விட்டுப் பிரியும்போது நேற்று முன்தினம் கூறினார். பொது நிர்வாக அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா.

பலாலி விமானநிலையத்தில் அவர் பிரியும்போது, 'இவ்விதமான ஒரு சந்திப்பை ஏற்படுத்தியவர் யாழ். மேயர் திரு. அல்பிரட் துரையப்பா அவருக்கு என் இதயபூர்வமான நன்றி என்றார்.

## நிற்சாமம் சம்பவம்: விசாரணை ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், புதன் நிற்சாமத்தில் இடம் பெற்ற பொலிஸ் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலியான கே. நல்லட்டுவின் மரணம் தொடர்பான நீதவான் விசாரணை இன்று மல்லாகம் நீதவான் திரு. ஜேசுரத்தினம் முன்னிலையில் மீண்டும் ஆரம்பமாகியது.

பிரேதபரிசோதனை நடத்திய டாக்டரின் சாட்சியத்தைப் பதிவுசெய்த பின்னர் மேல்விசாரணையை நீதவான் இம்மாதம் 24-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இந்த விசாரணை தீர்ப்பு வழங்கப்படும்வரை இச்சம்பவத்தில் தொடர்புள்ளவர்கள் என்று கருதப்படும் செல்லத்துரை, ரணவக்க ஆகிய இரு கான்ஸ்டபிள்களையும் கட்டாய லீவில் அனுப்பும்படி நீதவான் ஏற்கனவே உத்தரவிட்டிருப்பது தெரிந்ததே.

இன்றைய விசாரணைகளின் போது காலஞ் சென்றவரின் நலன்களை அவதானிக்க சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜராகியிருந்தார்.

......

## சிவகுமாரனுக்கு நினைவுச்சின்னம்

யாழ்ப்பாணம், வியாழன் காலஞ்சென்ற இளைஞன் சிவகுமாரனின் நினைவுச்சின்ன அமைப்பு வேலைகளை கவனிப்பதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் தலைவராக கோப்பாய் தேசியப்பேரவை உறுப்பினர் திரு. எஸ். கதிரவேற்பிள்ளையும், செயலாளராக திரு. க. குணசேகரமும், பொருளாளராக சட்டத்தரணி திரு. வே. யோகேஸ்வரனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தமிழர் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், முன்னாள்

(6ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிப்பாய் இந்து 64-வது ஆண்டுவிழா

மானிப்பாய், புதன்

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் 64-வது ஆண்டு நிறைவுவிழா அண்மையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. முன்னாள் உதவி அதிபர் திரு. மு. சிவபாதசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

அதிபர் திரு. மு. பேரா விரவர் தமது தலைமையுரையில் "மாணவர்களை மையமாகக்கொண்டே கல்வி இயங்கவேண்டும் என்றும் ஆனால் ஆசிரியனே கல்லூரிக்கு மையமானவன்" என்றும் கூறினார். கல்லூரிச் சின்னத்திலே பொறிக்கப்பட்டுள்ள இலட்சியங்களுக்கமையவே மாணவர்களை உடல் அறிவு, உள ஆத்மீகவளர்ச்சிகளில் நாட்டமுள்ளவர்களாக்கிப் பின் கடவுள் பற்று, நாட்டுப் பற்று இன்றைய சூழலுக்கேற்ப பொதுவுடைமைச் சமூகப் பற்று முதலியன உடையவர்களாக்குவது தமது கடினமான கடமை என்றும் அவர் கூறினார். 64 வருட காலத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆற்றிவரும் சேவையை அவர் குறிப்பிட்டார். (ஈ)

## ரத்துச்செய்யக் கோரிக்கை

உடுப்பிட்டி, புதன்

"கடந்த வருட நடுப்பகுதியில் சுதந்திரபுரத்தில் ஐந்து ஏக்கர் தென்னங்காணியும், ஒரு ஏக்கர் வயற்காணியும் வழங்குவதற்காகக் கெசட் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்டுக் காணிக்கச்சேரியும் நடாத்தப்பட்டது. ஆனால் அந்த பிறிக் குடியேறியவர்களுக்கென இவ்வருடம் மே மாதம் 20-ம், 21-ம் திகதிகளில் காணிக்கச்சேரி நடாத்தப்பட்டது. இக்காணிக்கச்சேரி சட்ட விரோதமானது. ஆதலால் அத்துமீறிக்குடியேறியோருக்கென நடாத்தப்பட்ட காணிக்கச்சேரியை ரத்துச் செய்ய வேண்டும்."

என்று கண்டாவளை காணி, விவசாய அமைச்சருக்கும் மாஜிஸ்திரேட்டுக்கும் வவுனியா தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு. சி. ஈஸ்வரலிங்கப்பெருமான் அனுப்பிவைத்துள்ளார்.



வண்ணார்பண்ணை, புதன்

காரைநகர் மருதடிப் பிள்ளையார்கோவிலின் சந்ததியில் உள்ளவரும், சைவத் தொண்டர்கும், ஈகைக்கும் பெரும்புகழ் கொடுத்துதவிய வம்ச தாயாக இருந்துவந்த வருமான, காரைதீவு திசை வழங்க மாப்பாண முதலியார் வம்சத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற இலட்சுமி அம்மாளின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று நடைபெறுகின்றன.

இலட்சுமி அம்மாள், 1550ம் ஆண்டில் போர்த்துக்கீசர் ஆட்சிக்காலத்தில் ஊர்காவற்றுறையில் நிதிப் பொறுப்பாளராயிருந்த மாணு முதலியின் குடும்பத்தையும் 1564ம் ஆண்டில் சங்கிலிய மன்னனைப் பறங்கியர் பிடிக்க உதவிய காக்கைவன்னியன் குடும்பத்தையும் வியாக்கியபாதரின் சந்ததியையும் சேர்ந்தவர். 1917ம் ஆண்டு மாசி மாதம் 14ந் திகதி பிறந்த இவர் 1974ம் ஆண்டு ஜூன் மாதம் 10ந்திகதி தேகவியோகமடைந்தார்.

—சி. பா.

## கூட்டுறவுதின விழா

மீசாலை, புதன்

"நாட்டு மக்களை ஒன்றுபடுத்த கூட்டுறவு சங்கம்போல வேறு இயக்கம் வேறில்லை. கிராம மக்களின் மனதில் கூட்டுறவைப் பற்றிய மகத்துவமான நல்லெண்ணத்தை பரப்பவேண்டும்.

தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க ஆதரவில் கொடிகாமத்தில் நடந்த கூட்டுறவு தினவிழாவில் பேசிய கூட்டுறவு பரிசோதகர் திரு. கே. இ. சண்முகம் மேற்கண்டவாறு கூறினார்.

நெறியாளர் குழுத்தலைவர் திரு. எஸ். எம். கமலநாதன் தலைமையில் இவ்விழா நடைபெற்றது ......

## தொழிற்கல்வி கற்கைநெறி அங்கீகாரம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் பல்தொழில் நுட்பநிலையத்தில் கற்பிக்கப்பட்டுவரும் தொழிற்கற்கைகளுக்கான தகுதித் தேர்வு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக யாழ்ப்பாண எம். பி. திரு. சி. எக்ஸ். மார்ட்டினுக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதமொன்றில் உள்ளூராட்சி, உள்நாட்டு, பொது நிர்வாக, நீதியமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

இது சம்பந்தமாக மேற்படி கல்லூரியைச் சேர்ந்த தொழிற்கற்கை நெறி மாணவர் மன்றத்தினரும் அமைச்சர் பீலிக்ஸுடன் ஏற்கனவே தொடர்பு கொண்டிருந்தனர்.

## புதிய அதிபர்

சுழிபுரம், புதன்

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் புதிய அதிபராக திரு. எஸ். ஆறுமுகதாசன் இம்மாதம் முதல் நியமனம் பெற்றுள்ளார்.

## வெள்ளிவிழா உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், வியா.

யாழ். மாநகரசபை வெள்ளி விழாவை முன்னிட்டு இன்றும் நாளையும் யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் இருபெரும் உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இன்று கொழும்பு மாநகர சபைக் கோஷ்டியும் யாழ். மாவட்ட பொதுச் சேவை விளையாட்டுக் கழக தெரிவுக் கோஷ்டியும், நாளை கொழும்பு மாநகரசபைக் கோஷ்டியும் யாழ். முதல்வர் தெரிவுக் கோஷ்டியும் மோதுகின்றன. ......

## டிஸ்பென்சர்களுக்கு பயிற்சி வகுப்பு

கிளிநொச்சி, புதன்

யாழ் மாவட்ட அரசாங்க மருத்துச்சாலைகளில் மருந்துக் கலவையாளர்களாகப் பணிபுரியும் டிஸ்பென்சர்களுக்கான பயிற்சி வகுப்புகள் செப்டம்பர் மாதம் முதல் நடைபெறவுள்ளது.

புதிய மெற்றிக் அளவு முறையில் மருந்து தயாரித்தல், மருந்துகளின் விநியோகம், மருந்து பாதுகாத்தல், மருந்து பாவனைக்குட்படுத்தல் போன்ற விடயங்கள் பற்றி தேர்ச்சி பெற்ற மருந்தாளர்களினால் நடைமுறைப்பயிற்சி அளிக்கப்படும்.

இந்தப் பயிற்சி வகுப்புகள் யாழ் அரசாங்க வைத்தியசாலை, தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலை, பருத்தித்துறை வைத்தியசாலைகளில் நடைபெற ஒழுங்குகள் நடைபெற்றுவருகிறது.

இப்பயிற்சி வகுப்புக்கான ஒழுங்குகளை யாழ் மாவட்ட சௌக்கிய அத்தியட்சகர் அரசாங்க மருந்துக் கலவையாளர் சங்கத்தின் செயலாளர் திரு. என். கந்தசாமி கவனித்துவருகின்றனர். (ஈ) 169


ந. ஜீவேஸ்வரா
சட்டத்தரணி
"திருவருள் வாசம்"
மாவிட்டபுரம்
தெல்லிப்பழை

1973-ம் ஆண்டு
நீதி நிருவாகச சட்டம்
இல. 44
உரிமைத்தத்துவப் பத்திரம்
வழங்குவதற்கு 283-ம்
பிரிவின் படி
இடைக்கால கட்டளை
இலங்கை குடியரசின்
பொது அறநிலைக்
காப்பாளர்
முன்னிலையில்

யாழ்ப்பாணம்
T 3012

மீசாலை வடக்கிலிருந்து மரணசாதன மெழுதாது காலஞ்சென்ற சடையர் சிவஞானம் என்பவரின் சொத்துக்கள் உடைமைகள் சம்பந்தமாக

காலஞ்சென்றவர் சடையர் சிவஞானம் கைம்பெண் நாகேஸ்வரி மீசாலை வடக்கு விண்ணப்பகாரி

என்பவருக்கும் பராயமடையாதவர்கள்

1. சிவஞானம் மகள் உமாதேவி.

2. சிவஞானம் மகன் யோகவசுந்தரம் ஆகிய இருவரும் மீசாலை வடக்கில் உள்ளவர்கள்.

3. கொடிகாமம், பருத்தித்துறை வீதியில் வசிக்கும் சின்னப்பிள்ளை ... பிள்ளை;

இவர் 1-ம், 2-ம் பராயமற்றவர்களான பிரதிவாதிகளை தங்கள் சட்டபூர்வமான பாதுகாவலரான மூன்றும் பிரதிவாதியின் மூலம் ஆஜராகின்றனர்.

பிரதிவாதிகள் ஆகியோருக்கும் இடையில் 1973 கார்த்திகை மாதம் 27-ம் திகதியிடப்பட்ட விண்ணப்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முக்கிய உறுதிக்கூற்றுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன எனத் திருப்தியடைந்த மேலதிக பொது அறநிலை காப்பாளர் எம். ஏ. நல்லப்பொல ஆகிய யான் இக்கட்டளையின் அறிவித்தலைப்பெற்றவராவது ல்லது வேறு யாராவது 1974 ஆனி மாதம் 5-ந் திகதி அல்லது அதற்குமுன்னர் தக்க காரணங்காட்டி ஆட்சேபம் தெரிவித்தாலன்றி

அ. மேற்குறித்த விண்ணப்பக்காரி குறித்தகாலஞ்சென்றவரின் கைம்பெண் என்ற முறையில் குறித்த காலஞ்சென்றவரின் மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்களுக்கும் மற்றும் உடைமைகளுக்கும் நிர்வாகத்தத்துவப்பத்திரம் பெறுவதற்கு உரித்துடையவரென்றும் அவ்வண்ணமே அவருக்கு நிர்வாகத் தத்துவப் பத்திரம் வழங்கப்படுகின்றதென்றும்.

ஆ. இம் மரணச் சொத்து சம்பந்தமாக மேற்குறித்த 1-ம் 2-ம் பராயமடையாத பிரதிவாதிகளின் சட்டபூர்வ பாதுகாவலராக மேற்குறித்த 3-ம் பிரதிவாதி நியமிக்கப்படுகின்றாரென்றும் இத்தால்கட்டளையிடுகிறேன்.

1974 ஆண்டு சித்திரை மீ 30-ம் நாள்

ஒப்பம்
சோ. இராசநாதன்.
உரிமைத்தத்துவ அலுவலர்
பொது அறநிலைக்
காப்பாளருக்காக

வரைந்தவர்
ஒப்பம்
ந ஜீவேஸ்வரா
விண்ணப்பகாரியின்
சட்டத்தரணி

காரணம் காட்டுவதற்கான காலம் 3-7-74 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

காரணம் காட்டுவதற்கான காலம் 17-7-74 வரைநீடிக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்
சோ. இராசநாதன்
உரிமைத்தத்துவ அலுவலர்
பொது அறநிலைக்காப்
பாளருக்காக


## பாடசாலைகள் மக்களின் சொத்து

புங்குடுதீவு, புதன்

"பாடசாலைகள் மக்கள் சொத்தாக மதிக்கப்படவேண்டும். அவற்றின் முன்னேற்றத்தில் பெற்றோர்கள் கூடிய அளவில் அக்கறை கொள்ள வேண்டும். மாணவர்களின் முன்னேற்றம் பெற்றோர்களின் சிரத்தையைப் பொறுத்ததே. புதிய கல்வித்திட்டத்தால் அதிக நன்மைபெறப் போகிறவர் கிராமப்புறமாணவர்களே. இதனை நன்குணர்ந்து பெற்றோர்கள் பாடசாலை வளர்ச்சியில் ஊக்கங் காட்டவேண்டும்".

இவ்வாறு குறிப்பிட்டார் ஊர்காவற்றுறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வ. நடராசா, புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயப் பெற்றோர் ஆசிரியர் சங்கம் நடத்திய கலைவிழாவிற்குத் தலைமைவகித்துப் பேசுகையிலேயே திரு. நடராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் திரு. கே. கனகசுந்தரம், திரு. செ. தில்லைநாதன பண்டிதர் வீ. வ. நல்லதம்பி ஆகியோரும் உரையாற்றினர். (ஈ)


## அறிவித்தல்

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 5000 வெற்றுச்சாக்குகள் கேள்விப் பத்திரமூலம் விற்பனைக்கு இருக்கின்றன. 16-7-74க்கு முன்னர் ரூபா 25/-மேற்படி சங்கத்தில் கட்டி கேள்விப்பத்திரம் பெற்றுக் கொள்ளவும்.

கேள்விப்பத்திரம் 19-7-74 முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பவும்.

இங்ஙனம்,

பொதுமுகாமையாளர்.

விலாசம்:
பொதுமுகாமையாளர்,
உடுப்பிட்டி ப. நோ. கூ.
சங்கம்,
உடுப்பிட்டி,
வல்வெட்டித்துறை.

174

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## வரி விளம்பரம்

### கல்வி

காலத்தை வீணாக்காதீர்கள். பரீட்சைக்குச் சில மாதங்களே உள்ளன. எம்மிடம் தபால் மூலம் கற்று க. பொ. த. (சா) பரீட்சையில் நிச்சய சித்தி அடையுங்கள். றெக்ஸ் ரியூட்டரி, யாழ்ப்பாணம்.

285

### கல்வி

மின்சார இணைப்பு வேலைகள், ஒரு வருடம்-மாலை நேர வகுப்பு. வீடுகட்கு மின்சார இணைப்புக்கள், தண்ணீர்ப் பம்புகள், தண்ணீர் விநியோக இணைப்புச் சேவைகள். மேல் குறிப்பிட்ட வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் 25-7-74 வரையும் ஏற்றுக் கொள்ளப்படும். வகுப்புகள் 1-8-74 ல் ஆரம்பிக்கப்படும். விண்ணப்பப் பத்திரம் தேவைப்படுவோர் 15 சத முத்திரையுடன் கூடிய என்வலப்புடன் எழுதவும். சிவ. உ. சோமசேகரம், தலைவர். இ. சபாலிங்கம், காரியதரிசி, யாழ். நுண்கலை தொழிற் பாடசாலை, 426, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

343

### சேவை

படித்த இருபாலாருக்கும் தொழில் தேடித் திரிகின்றீர்களா? எங்களிடம் பதிவு செய்யவும். பொருத்தமான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். பிராஜ்மன் என்ரப்பிறைசஸ், 213/1, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.

302

### விற்பனைக்கு

மீனகாய், வெங்காயம், நெல் ஆகியவற்றுக்குரிய இரும்புத்தசினிகளும், பசளை வகைகளும் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம். ஸ்ரீதனா டிஸ்ரிபியூட்டர்ஸ், (முகமதலி அப்துலஸ் அருகாமையில்) 5, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். போன்: 515.

358

### பயிற்சி

கேந்திரகணித பொறிமுறைவரைதல் ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். விபரங்களுக்கு, 213, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

341

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின்
வெள்ளி விழாக் கொண்டாட்டம் அளிக்கும்
மாபெரும் உதைபந்தாட்டப்
போட்டிகள் இரண்டு

இடம்: துரையப்பா விளையாட்டரங்கு

போட்டி: 1

11-7-'74 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4-30மணி

பிரதம அதிதி: யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்
விமல் அமரசேகரா அவர்கள்

கொழும்பு மாநகராட்சி மன்றம்
எதிர்
யாழ். மாவட்ட பொதுச்சேவைகள் விளையாட்டுக்கழகம்

போட்டி: 2

12-7-74ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4-30மணி

பிரதம அதிதி: மாண்புமிகு மாநகர முதல்வர்
அ. த. துரையப்பா அவர்கள்

கொழும்பு மாநகராட்சி மன்றக் கோஷ்டி
எதிர்
யாழ். முதல்வர் கோஷ்டி

நுழைவு: இருக்கைக்கு ரூ. 1/-
மைதானம் -/50 சதம்

ஏ. ரி. சுந்தரம்

யாழ் மாநகர ஆணையாளரும்,
வெள்ளிவிழாக்குழுப் பொருளாளரும்.

176


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரைக் காட்டிக் கொடுக்கவில்லை; தமிழருக்குக் காட்டிக் கொடுக்கிறோம்''

— யாழ். மேயர்

யாழ்ப்பாணம், வியாழன் ''நாங்கள் தமிழரைக் காட்டிக் கொடுப்பதாக சிலர் கூறுகிறார்கள். நாங்கள் தமிழரைக் காட்டிக்கொடுக்கவில்லை. தமிழ்மொழிக்கு தொண்டாற்றிய பெரியார்களை, சிலை வடிவில் தமிழ் மக்களுக்கு காட்டிக்கொடுக்கிறோம்''.

யாழ் நகரில் நடந்த தலைவர்கள் சிலை திறப்பு விழாவில் பேசிய யாழ் மேயர் திரு. அல்பிரட் துரையப்பா மேற்கண்டவாறு கூறினார்.

திரு. துரையப்பா மேலும் பேசும்போது, ''தமிழ் தமிழ் என்று கூறுபவர்கள், கையில் அதிகாரம் இருந்த போது தமிழ் மொழிக்கு என்ன செய்தார்கள்?'' என்று கேட்டார்.

தமிழுக்கு அவர்கள் செய்ததை கண்ணுக்கு முன்னால் காட்டினால், மக்கள் அவர்கள் பின்னுக்கு வருவார்கள் என்றும் அவர் கூறினார். (ஈ)

# 'இனமத பேதமின்றி உழைக்க வேண்டும்''

— அரசாங்க அதிபர்

உடுப்பிட்டி, புதன் ''இந்நாட்டு மக்களாகிய எம்மிடையே அன்பு, அகிம்சை, நல்லுறவு வளரவேண்டும். புத்தரின் போதனைகள் எம்மிடம் ஒற்றுமையையும் அன்பையும் வளர்க்கின்றன. பௌத்த-இந்து சமயங்களின் குறிக்கோள் இதுவே. நமது நாட்டின் பொருளாதார கஷ்டத்தை நாமே சமாளிக்கொள்ளவேண்டும். ஆதலால் நாம் ஒற்றுமையாக இனபேதமின்றி நாட்டை முன்னேற்றவேண்டும்.''

இவ்வாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா கரவெட்டி ஸ்ரீ நாரத தமிழ்-பௌத்த வித்தியாலயத்தில் பிக்குகளுக்கு அன்னதானம் அளிக்கப்பட்ட வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

நெல்லியடிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பத்மஸ்ரீ காரியவசம் அன்னதானத்தை ஆரம்பித்துவைத்தார். வித்தியாலய அதிபர் திரு எச். யூனியன் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

# 'இளைஞர் ஒன்று பட்டால் சமுதாயம் விடுதலை பெறும்

யாழ்ப்பாணம், வியாழன் ''இன்றைய சமுதாயம் பல இன்னல்களால் நலிந்துவருகின்றது இளைஞர் சமுதாயம் ஒன்று திரண்டு ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொண்டால்தான் நமது சமுதாயம் விடுதலைபெற முடியும்.''

கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்ற இந்து இளைஞர் பேரவையின் மாநாட்டில் உரையாற்றிய கலை இளவல் திருமதி நாச்சியார் செல்வநாயகம் இவ்வாறு கூறினார்.

இந்து இளைஞர் பேரவையின் 5-வது மகாநாடு கொழும்பு இராமகிருஷ்ணமிஷனிலும், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும் நடைபெற்றன.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் 'சமுதாயத்தில் இந்து இளைஞனின் பங்கு' என்னும் தலைப்பில் உரையாற்றிய திருமதி நாச்சியார் செல்வநாயகம் மேலும் பேசுகையில், ''சுவாமி விவேகானந்தர் தமது இளமைப்பருவத்திலேயே சமூக சேவைகளில் ஈடுபட்டதால்தான் அவர் சேவையும் புகழும் நிலைத்து நிற்கின்றன உண்டு. உடுத்து இம்மை வாழ்வை அனுபவித்தால் போதாது. மறுமைக்கும் பலன்தர இளமையிலேயே இளைஞர் சமுதாயம், சமுதாய ஆக்கப்பணிகளில் ஈடுபடவேண்டும்' என்றார்.

தலைமையுரையாற்றிய திரு துரைராஜா கூறுகையில், ''கடந்த காலத்தில் இளைஞர் பேரவை ஆற்றத் தவறியன எல்லாம் இனிமேல் எமது பேரவை ஊக்கமுடன் நின்று ஆக்கப் பணிபுரியும்'' என்றார்.

இந்து இளைஞர் பேரவையின் கொடிதினம் இம்மாதம் 30ம் திகதி நடைபெறுமெனவும், தமிழ் மக்கள் அனைவரும் இதற்கு உதவவேண்டுமென்றும் வேண்டுகோள் விடப்பட்டது.

## பிற மத போதனை

இந்துசமய மாணவர்களுக்குப் பிறமத போதனை என்ற விடயத்தைப் பேரவை உறுப்பினர்கள் பலர் வன்மையாகக் கண்டித்தனர்.

இந்துசமய நூல்களில் பிறமதங்களைப் புகுத்தவேண்டாமென அரசைக் கேட்டுக் கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

முதல் நாள் நிகழ்ச்சிகள் வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் பேரவைத் தலைவர் திரு. தா. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது. அங்கு சிறப்புரையாற்றிய இரத்மலானை நீதியரசர் திரு. வி. சிவசுப்பிரமணியம் ''எமது சமயமும் மொழியும் வளர இளைஞர்கள் அயராது உழைக்கவேண்டும். அவர்களைப் பின்பற்றி முதியோரும் முயற்சிசெய்ய வேண்டும்'' எனக் கூறினார். (ஈ)

# போர்த்துக்கல் பிரதமரும் 4 மந்திரிகளும் ராஜினாமா

லிஸ்பன், ஜூலை 10 போர்த்துக்கல் பிரதம மந்திரி திரு. அடிலேல் கார்லோஸ் தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

இவருடன் உதவிப் பிரதமர் உள்நாட்டு அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர் பொருளாதார அமைச்சர் ஆகிய நால்வரும் ராஜினாமாச்செய்துள்ளனர். மேலும் சில அமைச்சர்கள் ராஜினாமாச் செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமர் என்ற முறையில் கூடிய அதிகாரம் கோரிய கார்லோஸ்தாம் ராஜினாமாச் செய்வதாகத் தெரிவித்துள்ளார்.

இவர் கடந்த ஏப்ரல் மாதம் போர்த்துக்கலில் இடம்பெற்ற [illegible] அடுத்து பிரதமராகப் பதவி ஏற்றார்.

## கனடாவில்

# ட்ரூடோ மீண்டும் பிரதமர்

ஒட்டாவா, ஜூலை 10 கனடாவின் பிரதமர் திரு. ட்ரூடோவின் தலைமையிலான லிபரல்கட்சி மீண்டும் அரசாங்கத்தை அமைக்கக் கூடிய பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுள்ளது.

லிபரல்கட்சி 140 தொகுதிகளில் வெற்றிபெற்றிருக்கிறது. எதிர்க்கட்சிகள் யாவும் ஒன்று சேர்ந்தாலும் லிபரல் கட்சிக்கு 16 அதிகப்படியான ஸ்தானங்கள் இருக்கின்றன.

# வெள்ளத்தில் 1000 பேரைக்காணோம்

பொகோட்டா, ஜூலை 10 கொலம்பியாவில் நக்கோடா பிரதேசத்தில் இடம்பெற்ற பெரும் வெள்ளப்பெருக்கு காரணமாக ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காணாமல் போய்விட்டனர் என அறிவிக்கப்படுகிறது.

இவ் வெள்ளப்பெருக்கினால் பலர் வீடிழந்துள்ளனர் என்றும் இங்குள்ள எண்ணெய்க் குழாய்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பஸ் மோதலில் 22 பேர் பலி

கராச்சி, ஜூலை 10 பாகிஸ்தானில் இரு பிரயாணிகள் பஸ்கள் மோதி தீப்பிடித்துக் கொண்டதால் 22 பேர் பலியாகினர்.

மேலும் 24 பேர் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# விஜயவீரா தொகுப்புரை

கொழும்பு, புதன் ஏப்ரல் கிளர்ச்சித் தொடர்பான குற்றவியல் நீதிவிசாரணை ஆணைக்குழுவின் முன் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள வழக்கில் 13-வது சந்தேகநபரான ரோகணவிஜயவீரா நேற்று தமது எதிர்வாதத் தொகுப்புரையை ஆரம்பித்தார்.

ஜனதாவிமுக்தி பெரமுனை ஓர் இரகசிய ஸ்தாபனமல்ல என்றும், தாம், ஒரு சூழ்ச்சிக்காரர் அல்லவென்றும் அவர் சொன்னார். இதற்கு ஆதாரமாக இதர அரசியல் கட்சிகளையும் அவர் எடுத்துக் காட்டினார்.

1971-ம் ஆண்டு ஆயுதங்களை சேகரிக்குமாறு தாம் கட்டளையிட்டதாக அவர் மீண்டும் ஒப்புக்கொண்டார்.

# ஆலயம் திறக்கப்பட்டது

பருத்தித்துறை, புதன் அல்வாய் தெற்கு மாலிசந்தி விநாயகர் ஆலயம் இருபான்மை மக்கள் வழிபடுவதற்காக திறந்து விடப்பட்டுள்ளது. இவ்வாலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 8-ம் திகதி ஆரம்பமானது. (ஈ)

# 5 போர் விமானங்கள் மலையில் மோதின

ரங்கூன், ஜூலை. 10 பர்மாவின் 5 போர் விமானங்கள் அங்குள்ள மலைப்பகுதி ஒன்றில் மோதி நொருங்கியுள்ளன என்று பர்மா செய்திகள் தெரிவிக்கின்றன.

இவற்றில் இருந்த 10 விமானிகளும் [illegible] வும் அறிவிக்கப்படுகிறது.

# ''தெய்வீகக் காதலால் மானிட காதலைச் சாடியவர்'

பருத்தித்துறை, புதன் 'தொண்டர்கள் உள்ளத்தால் வெண்ணீற்றிலும் வெண்மையானவர்கள் தமது ஆன்மீக ஈடேற்றத்துக்காக மட்டுமன்றி மக்களுக்காக, குறிப்பாக சைவத்துக்காக தமது உடல், பொருள், ஆவி, அனைத்தையும் அர்ப்பணித்தவர்கள்; பக்திச்சுவை நனி சொட்டச்சொட்டப் பாடிய தொண்டர்களின் தொண்டுடன் சேக்கிழாரின் தொண்டு அரசியலிலே, சமய உலகிலே இலக்கிய வரலாற்றிலே வரலாற்றிலே மறக்க முடியாதது. சைவத்தை அரசியல் மதமாக்கி, காவிய உலகிலே-தெய்வீகக்காதலால் மானிடக் காதலைச்சாடி, சிந்தாமணிக்கு மறுப்புக்கொடுத்து சைவக் காப்பியத்தைப் படைத்த பெருமை இவரையேசாரும்'.

இவ்வாறு கரவெட்டி நச்சன்தோப்பு விநாயகர் ஆலயக் கடைசிநாள் உற்சவ முடிவில் 'தொண்டர் சீர் பரவுவார்' என்னும் பொருள்பற்றி உரையாற்றிய சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கூறினார்.

திரு. எம். சிவசிதம்பரம் தலைமைதாங்கிய இக்கூட்டத்தில் தொடர்ந்து செல்வி அப்பாக்குட்டி பேசியதாவது: 'சேக்கிழார் நன்றி மறக்காத பெருந்தகை. சுந்தரரைக் காவியத்தலைவனாக்கி சந்தர்ப்பம் வாய்த்தபோதெல்லாம் அனபாயச்சோழன் புகழ்பாடித் தொண்டர்புகழ் நிறுவியவர் தம்கவிதைக்குக்கருவளித்த சுந்தரரை 13 இடங்களிற் பாராட்டத் தவறவில்லை. அவரது காவியத்திலே பண்பாட்டுநிலையிற் குறைந்த எச்சொற்களையுங் காணமுடியாது. திவ்வழுக்கியும் சொல்லாதவரது. அவரின் சமயத்தொண்டு, அரசியல்தொண்டு, மொழித்தொண்டு, தொண்டர்தம் சீர்பரப்பியதொண்டு எந்தவொரு தமிழ்மகனாலும் குறிப்பாகச் சைவனாலும் மறக்கமுடியாது. மணநூலை மன்னவன் முற்பட்ட சேக்கிழாருக்கு காவியம் படைக்கும் காவியத்தின்பொறுப்பு கவனயளிக்காமலில்லை. அனபாயனிடம் தெய்வீகக் காதலைக் கருப்பொருளாகக் கொண்ட காவியத் தருவதாகவாக்களித்துவிட்டார். சிந்தித்த செம்மலைச் சிவன் கைவிடவில்லை. 'உலகெலாம்' என்ற அடிகிடைத்தது.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. சி. எம். தர்மலிங்கம், இளைப்பாறிய மாவட்டநீதிபதி திரு வி. கே. கந்தசாமி பருத்தித்துறை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் (செல்வி) எஸ். கந்தையினார் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். திரு வி. கந்தப்புநன்றிகூறினார்.

# ஆறரைக்கோடி கிடைத்தது!

## உல்லாசப் பிரயாணிகள் மூலம்

கொழும்பு, புதன் கடந்த வருடம் ஜூலை மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை இலங்கைக்கு விஜயம் செய்த உல்லாசப் பிரயாணிகளால் 650 லட்சம் ரூபா அந்நியச் செலாவணிகிடைத்துள்ளது.

அதே காலப் பகுதியில் 607 புதிய நவீன ஹோட்டல் அறைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இதற்கென 530 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது. தற்போது உல்லாசப் பிரயாணிகளுக்கு சகல வசதிகளுமளிக்கக் கூடிய 8,500 விடுதி அறைகள் நகரெங்கும் உள்ளன.

உல்லாசத்துறை அமைச்சு வெளியிட்ட அறிக்கையொன்றில் மேற்கண்ட விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு, சுவீடன், சுவிஸ்லாந்து, அமெரிக்கா போன்ற இடங்களிலிருந்தே கூடுதலான உல்லாசப் பயணிகள் வருகைதந்திருந்தனர்.

உல்லாச சபையின் காலாண்டுப் பத்திரிகையொன்றையும் மாதாந்தச் செய்தித்திரட்டொன்றையும் வெளியிடுவது சர்வதேச உல்லாசப் பிரயாணிகளுக்கும் இலங்கையைப் பற்றிய போதிய அறிவை வளர வழிபிறக்கின்றது.

# யு. என். பி. வந்தால்...

பருத்தித்துறை, புதன் ''இன்று பாசிச சக்திகளின் ஏகப்பிரதிநிதியாக விளங்கும் யு. என். பி. மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றினால், ஏற்கனவே பல துறைகளில் முன்னேற்றங்கண்டுவரும் நாடு பல ஆண்டுகள் பின்தள்ளப்பட்டு, மீண்டும் முதலாளித்துவ கொடுமைகளை அனுபவிக்க வேண்டி நேரிடும். எனவேதான் இன்று சகல முற்போக்குச் சக்திகளும் ஒன்றுதிரண்டு, பாசிசம் எந்த உருவில் வந்தாலும் அதை உடைத்தெறியத் தயாராக வேண்டும்.''

இவ்வாறு திரு. வி. செல்லையா கரவெட்டியில் நடந்த இலங்கை கம்யூனிஸ்ட்கட்சியின் 31-வது ஆண்டு விழாவில் உரைநிகழ்த்தும் போது கூறினார்.

ஆசிரியர் திரு. ஆ. க. தம்பையா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. த. சிதம்பரப்பிள்ளை பேசும் போது சமுதாய உயர்வுக்கு கட்டுறவின் அவசியத்தை வலியுறுத்தினார். (ஈ)

# ''சமூக ஒற்றுமைக்கு முன்மாதிரி''

உடுப்பிட்டி, புதன் ''ஒரு தனிப்பட்ட சமூகத்தவர்களை மட்டும் கொண்டிருக்காது இப் பகுதியிலே வாழ்கின்ற சகல சமூகத்தவர்களும் ஒருங்கிணைந்து திரு. செல்லையாவுக்களிக்கும் வரவேற்பு அவரது பொதுநல சேவையின் புனிதத்துவத்தை வலியுறுத்துகின்றது. சமூக ஒற்றுமைக்கு இது ஒரு முன்மாதிரியாகும்.

இவ்வாறு உடுப்பிட்டி தேசிய பேரவை உறுப்பினர் திரு கே. ஜெயக்கொடி புதிய சமாதான நீதவானாக நியமனம் செய்யப்பட்டதுள்ளதை தெற்கு திரு. வி. செல்லையாவிற்கு உடுப்பிட்டித் தொகுதி கம்யூனிஸ்ட் வாலிப முன்னணியினர் அளித்த வரவேற்பில் பேசுகையில் கூறினார்.

திரு. செ. சதானந்தன் தலைமையில் இவ்வரவேற்பு விழா நடைபெற்றது. மூன்றாம் கட்டைவேலி-நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தலைவர் திரு. த. சிதம்பர பிள்ளை, கல்விபதிகாரி திரு. த. இராசலிங்கம், திரு எம். எஸ். சீனித்தம்பி, ஜே. பி., திரு பீ. ஜே. அன்ரனி, உட்படவேறுபலரும் பாராட்டிப் பேசினர்.

# தவறிவிழுந்தார்

சுழிபுரம், புதன் சர்வதேச கூட்டுறவாளர் தினவிழாவையொட்டி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் நடாத்திய கூட்டுறவுவிழா ஆரம்பதினத்தன்று கல்லூரி மேல்மாடியிலுள்ள கம்பத்தில் கூட்டுறவுக்கொடியை ஏற்றிவிட்டு இறங்கிய வாலிபர் ஒருவர் இறங்கும் போது கால்தவறி கீழே விழுந்து கால்முறிந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வருடம் இருமுறை சிங்களத் தேர்ச்சிப் பரீட்சை!

கொழும்பு, புதன்

அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு நடத்தப்படும் சிங்கள தேர்ச்சிப் பரீட்சைபற்றிய விபரங்கள் இனிமேல் தனித்தனியே திணைக்களங்களுக்கு அறிவிக்கப்படமாட்டாது என்றும், திணைக்கள அதிகாரிகள் இதன் விபரங்களைப் பத்திரிகைகள் மூலமும் வானொலி மூலமும் அறிந்துகொள்ளவேண்டும் என்றும் பரீட்சை இலாகா அறிவித்துள்ளது.

இப்பரீட்சை மார்ச், ஆகஸ்ட் மாதங்களில் நடைபெறும் என்றும் இத்தகைய முடிவு திகதிகள் எக்காரணங்கொண்டும் பின்போடப்படமாட்டாது என்றும் திணைக்களம் அறிவித்துள்ளது.

......

ரயில்முன்பாய்ந்து

## வயோதிபர் தற்கொலை

யாழ்ப்பாணம், புதன்

70 வயது வயோதிபர் ஒருவர், புகைவண்டிமுன் குதித்து தற்கொலை செய்துகொண்டார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த நீக்கொல் வெதசிங்கம்வின் மரண விசாரணையின் போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. வி. நடராசா மரணவிசாரணை நடத்தினர்.

நாவலர் வீதி புகையிரதக் கடவையில் புகைவண்டிவந்தபோது, காலஞ்சென்றவர் திடீரென பாய்ந்தாரென்றும், சுமார் 50 யாருக்கப்பால், புகைவண்டி நிறுத்தப்பட்டதென்றும் விசாரணையில் கூறப்பட்டது.

தலையும் வலது கையும் உடலிலிருந்து துண்டிக்கப்பட்டிருந்ததென்றும், உடல் உறுப்புகளை ஒன்றுசேர்த்தபின் சுரவிரதிபன் என்பவர் அடையாளம் கண்டதாகவும் கூறப்பட்டது.

விசாரணையின் பின் தற்கொலை என்ற தீர்ப்பு அளிக்கப்பட்டது. (ஈ)

---

## தளபாடம் இல்லை

கிளிநொச்சி, புதன்

கிளிநொச்சிக் கல்வி வட்டாரத்தில் அண்மையில் கனகாம்பிகைத் திட்டத்திலும், இருவையாறு படித்த வாலிபர் திட்டத்திலும் ஆரம்பித்துவைக்கப்பட்ட இரு பாடசாலைகளிலும் பிள்ளைகள் இருந்து படிப்பதற்கும், ஆசிரியர்கள் தங்கள் கடமையிலான காரியங்களைச் செய்வதற்கும் ஏற்ற தளபாடங்கள் இன்னமும் கிடைக்கவில்லை.

இதனால் இக்குடியேற்றத் திட்ட பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் பாடசாலை வாழ்நாள் பாழாகிறதென வருத்தம் தெரிவித்து குறித்த அதிகாரிகளுக்கு ஆவன செய்யும்படி கோரியுள்ளனர். (ஈ)

## 'வி. என். பி. மறைவு பெரும் நஷ்டம்'

மீசாலை, புதன்

'அமரர் வி. என். பி. ஒரு சிறந்த எழுத்தாளன். எழுத்தில் தனக்கென ஒருபாணியை உடையவர், இவரது எழுத்துக்கள் படிக்கப்படிக்க தெவிட்டாதவை. இவரின் மறைவு கலை உலகிற்கு ஈடுசெய்ய முடியாத நஷ்டமாகும்'

தென்மராட்சி பக்திநெறிக் கழகச் சார்பில் நடைபெற்ற அண்மையில் கதிர்காமபாத யாத்திரையில் காலமான கவிஞர் திரு. வி. என். பாலசுப்பிரமணியத்தின் நினைவாஞ்சலிக் கூட்டத்திற்கு கழகத் தலைவர் சைவப்புலவர் சு. வி. மகாலிங்கம் தமது தலைமையுரையில் மேற்கண்டவாறு கூறினார். சாவகச்சேரியில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. எஸ். நவரத்தினம் செல்வி எஸ். கோமளவல்லி உட்படப் பலர் உரையாற்றினர்.

---

## 3-வது பரிசு

மீசாலை, புதன்

இலங்கை வானொலி விலசாய ஒருநகெழுத்துப் போட்டியில் மூரகமோட்டை முருகானந்த மகாவித்தியாலயம் 3-வது இடத்தை சுவீகரித்துள்ளது. — —

## நியமனம்

பருத்தித்துறை, புதன்

பருத்தித்துறை பஸ் நிலைய உதவிமுகாமையாளர் திரு. எஸ். செகலிங்கம் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் காரைநகர் பஸ் நிலைய முகாமையாளராகப் பதவியுயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரது இடத்துக்கு வடமாகாணப் பிராந்திய கட்டுப்பாடு அலுவலகத்திலிருந்து திரு. எஸ். யோகராசா நியமிக்கப்பட்டுள்ளார். (ஈ)

## வீதி அமைப்பு

புங்குடுதீவு, புதன்

காரைநகரில் சாம்பலோடைப் பகுதியில் மீனவர்களுக்கெனப் புதிய வீதியொன்று அமைக்கப்படவுள்ளது. இவ் வீதிக்கென அரசு 9000 ரூபாவை நன்கொடையாக அளித்துள்ளது.

## "கலை தெய்வகமானது"

சங்கானை, புதன்

"கலை தெய்வீகமானது. கலைக்கும் இறைவனுக்கும் நெருங்கிய உறவுண்டு. இசையினும் சுவரப்படாதோர் எவருமில்லை. இந்த அரசாங்கம் இந்நாட்டில் இருக்கும் சகல இன மக்களின் கலை, கலாச்சாரம், இசை போன்றவற்றைக் கட்டிக்காத்து அதற்கு புத்துயிர் ஊட்டுவதற்கென பிரத்தியேக அமைச்சையும் நிறுவியுள்ளது" என்று சங்கானை பட்டினசபை முன்னைநாள் தலைவரும் தற்போதைய முதலாம் வட்டார அங்கத்தவருமான திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் சங்கானையில் சரஸ்வதி கலாமன்ற இசையான் வகுப்பின் இறப்புவிழாவில் பேசுகையில் கூறினார்.

---

## 18 மாதம் கடுழியம்

கீரிமலை, புதன்

கீரிமலையில் உள்ள சின்னையா-இராசதுரை என்பவரது கடையில் வானொலி உபகரணங்கள் உட்படச் சுமார் ஐந்நூறு ரூபா பெறுமதியான பொருட்களைத் திருடிய குற்றத்திற்காக கருணைரஞ்சன், ஜேன், சாமித்தம்பி பாக்கியராசா ஆகிய இருவருக்கும் மல்லாகம் நீதிபதி திரு. ஜெகரத்தினம் பதினெட்டு மாதக் கடுழியச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். (ஈ)

# "டானியலின் படைப்புகளில் மண்வாசனை வீசுகிறது"


திருநெல்வேலி, புதன்

"கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக எழுத்துலகில் நடமாடிவரும் எழுத்தாளர் கே. டானியல் மக்களின் பிரச்னைகளை மையமாகக் கொண்டு இலக்கியம்படைத்து வருகின்றார். மேல்தட்டு வர்க்கத்தினருக்கோ அல்லது பொழுதுபோக்கிலேயே என்றகவலையால் பஞ்சணையில் புரளும் பணக்கார வர்க்கத்தினருக்காகவோ இலக்கியம் படைக்கும் எழுத்தாளர் வர்க்கத்தை சேராதவர் இவர் இவரது படைப்புக்கள் எல்லாவற்றிலும் மண்வாசனை வீசும் இவரது பஞ்சமர் என்னும் நாவலுக்கு சாகித்திய மண்டலப்பரிசு கிடைத்தது மகிழ்ச்சிக்குரியவிடயமாகும். தீண்டாமை ஒழிப்பு இயக்கங்களில் பங்குகொண்டு தான் சார்ந்த இயக்கத்துக்காக அல்லும் பகலும் உழைக்கும் ஒரு தொழிலாளியான டானியல் 'உலகங்கள் வெல்லப்படுகின்றன!' என்னும் சிறுகதை நூலில் தன்கற்பனையை நன்கு பயன்படுத்தியிருக்கின்றார். இன்றைய நிலையில் கே. டானியல் போன்ற முற்போக்கு எழுத்தாளர்களின் படைப்புக்களை வாசகர்கள் ஆதரிக்கவேண்டும். இவர்களது படைப்புகளில் பல சமூக சீர்திருத்த கருத்துக்களை காணக்கூடியதாக இருக்கின்றன."

இவ்வாறு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் கே. டானியலின் உலகங்கள் வெல்லப்படுகின்றன. என்னும் சிறுகதை நூலின் அறிமுக விமர்சன விழாவில் தலைமைவகித்துப்பேசிய திருநெல்வேலி கிராம சேவையாளர் திரு. க. செல்வரத்தினம் கூறினர்

மற்றும் ஆசிச்செல்வன் இரசிகமணி கனக. செந்திநாதன்; தேவன், சட்டத்தரணிராஜராஜேஸ்வரன்தங்கராசா, திரு. தங்கவடிவேல், சில்லையூர் செல்வராசன், புதுவை இரத்தினதுரை. கே. டானியல், என். ஆர். சந்திரன் ஆகியோர் பேசினார்கள். விழாவின் இறுதி நிகழ்ச்சிகளாக திருநெல்வேலி பாலர் பாடசாலை சிறுவர் கலை நிகழ்ச்சிகளும், சக்கடத்தார், போறேன் கூத்துப் பார்க்க ஆகிய நாடகங்களும் நடைபெற்றன. (ஈ)


# மேலும் ஒரு கணமேனும் வலியால் வாட வேண்டாம்



டிஸ்பிரின் உட்கொண்டு தலைவலி, பல்வலி, வாதம், மாதவிடாய் வலி, நரம்புவலி, இடுப்பு வலி, சந்துவாதம் இவற்றிலிருந்து, அதி துரித நிவாரணம் பெறுங்கள்.

**டிஸ்பிரின் அதிதுரித நிவாரணம் தரும்**

டிஸ்பிரின் உட்கொண்ட உடனே செயற்பட ஆரம்பிக்கிறது. டிஸ்பிரின் கரையக்கூடியது. எனவே அது இரத்தோட்டத்தில் மிக விரைவாகச் செறிந்து அதிதுரித நிவாரணத்தை உங்களுக்குத் தருகிறது.

**டிஸ்பிரின் அதிசிறந்த நிவாரணம் தரும்**

டிஸ்பிரின் முற்றிலும் கரைவதாகையால், டிஸ்பிரினில் உள்ள சகல வலி நிவாரண அம்சங்களும், உங்களுக்கு ஆகக் கூடிய நிவாரணம் தரும் விதத்தில், உடம்பிற் செறிந்து விடுகின்றன.

**டிஸ்பிரின் அதி பாதுகாப்பான நிவாரணம் தரும்**

டிஸ்பிரின், வயிற்றில் அழற்சியை ஏற்படுத்தும் அமிலத்துகள்களை விட்டு வைப்பதில்லை. பாதக விளைவுகளை ஏற்படுத்தும் சேர்பொருள்களும் டிஸ்பிரினிற் கிடையாது, டிஸ்பிரின் கிரமமாக உட்கொள்ளப் பாதுகாப்பானது.

**டிஸ்பிரின் - உட்கொள்வது மிகச் சுலபம்**

உலகெங்குமுள்ள டாக்டர்கள் நம்பிக்கையுடன் டிஸ்பிரினைச் சிபாரிசு செய்கிறார்கள். டிஸ்பிரின் மிக வன்மை வாய்ந்தது. உட்கொள்ள மிகச் சுலபமானது. அது கரையக்கூடியதாகையால் நீரில் அல்லது ஒரு பானத்தில் அதைச் சேர்த்து உட்கொள்ளலாம். அதன் சுவையும் இதமானது. — நோயுற்ற குழந்தைக்கு மருந்து கொடுப்பது இதனால் எவ்வளவு சௌகரியமாகிறது!

| | | |
|---|---|---|
| குழந்தைகள்: | 1 முதல் 3 வயது வரை | - $\frac{1}{4}$ மாத்திரை |
| | 3 முதல் 6 வயது வரை | - $\frac{1}{2}$ மாத்திரை |
| | 6 வயதுக்கு மேல் | - 1 மாத்திரை. |

DISPRIN
SOLUBLE ASPIRIN

எல்லா வித நோவு, சளிசுரம், காய்ச்சல், தடிமலிலுமிருந்து அதிதுரித, அதிசிறந்த, அதி பாதுகாப்பான நிவாரணம் பெற எப்பொழுதும் டிஸ்பிரினை பாவியுங்கள்.

றெக்கிட் அண்ட் கோல்மன் உற்பத்தி

TAL 630


ஆசிரியருக்குக் கடிதம்:

# "யாழ். வளாகத்தில் ஆங்கில போதனை வேண்டும்"

5-7-74 'ஈழநாடு' பத்திரிகையில் யாழ். வளாகத்தில் தமிழே போதனா மொழியாகட்டும் என்ற தலைப்பில் உள்ள அஞ்சல் எழுதியிளைஞர் சங்கக் கோரிக்கையைப் பார்த்து வியப்படைந்தேன். யாழ். வளாகத்தில் தமிழே போதனா மொழியாகவேண்டுமென சங்கம் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியிருப்பதைக் கேட்கவுள்ளது. ஆனால் இது எவ்வளவுதூரம் வருங்கால தமிழ் மக்களுக்கு தீங்கு விளைவிக்குமென்பதை நினைக்கும்போது நெஞ்சம் பதறுகிறது. எங்கள் இளைஞர்கள் உயர் கல்வி கற்பது பட்டம் பெறுவதற்கு மாத்திரமல்ல, இக்கல்வியைக் கொண்டு தங்கள் ஜீவனத்தை நடாத்துவதற்கும் ஆகும்.

ஆனால் உத்தியோகம், எல்லா படித்த இளைஞர்கட்கும் கிடைக்காது. தமிழர் கெதி அதுதான். ஆனால் பிற நாடுகளில் ஆங்கிலம் படித்த பட்டதாரிகளுக்குத் தாராளமாக வேலை வாய்ப்புண்டு.

ஆகவே ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றவர்களுக்குத்தான் பிற நாடுகளில் வேலைவாய்ப்புப் பெறும் சந்தர்ப்பமும் உண்டு. சுயபாஷை விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்குப் பயன்படா; சுயபாஷையில் படித்த விஞ்ஞான, பொறியியலாளர்களுக்கு வெளிநாடுகளில் பிரபல்யமில்லாமல் போகிறது. ஆதலால் யாழ். பல்கலைக்கழகத்தில் பொறியியல், விஞ்ஞான, மருத்துவ போதனைகளை ஆங்கிலத்திலும், கலை, கலாச்சார சம்பந்தப்பட்டவைகளைச் சுயபாஷையிலும் போதிப்பதே நல்லது.

ஏ. வி. [illegible]

[illegible]

கிராமசபைத் தலைவர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாணவரிடமிருந்து பணம் வசூலிக்கத் தடை!

பருத்தித்துறை, புதன்

பாடசாலை மாணவரிடம் இருந்து அங்கீகரிக்கப்படாத எவ்விடயத்திற்கும் பணம் வசூல் செய்யப்படும் வழக்கம் நிறுத்தப்படல் வேண்டுமெனக் கல்வி மா அதிபர் கலாநிதி பிரேமதாச உடகம சகல அதிபர்களுக்கும் விடுத்துள்ள சுற்றறிருபத்தில் கூறியுள்ளார். மேலும் மாணவரும் மாணவியரும் ஒரே தினத்தில், ஓர் இடத்திற்குக் கல்விச் சுற்றுலா மேற்கொள்ளக்கூடாதென்றும், அவர்கள் செல்லும்போது பெற்றோர்களின் பிரதிநிதிகளாக ஓர் ஆணும் பெண்ணும் கூடிச் செல்லவேண்டுமென்றும் அச் சுற்றறிக்கை கூறுகிறது. மேலும், சேவை வசதிக் கட்டணம் கொடுக்காத மாணவர் எவ்வித தண்டனைக்கும் உட்படுத்தக்கூடாதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கடைசி பஸ் 11 மணி வரை!

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ் மாநகரசபை வெள்ளி விழாவை முன்னிட்டு 14-ந் திகதி வரைக்கும் கச்சேரி கோப்பாய், தாவடி, மானிப்பாய் பஸ் சேவை இரவு 11 மணி வரைக்கும், வழமைபோல் 10 மணிக்கு நடைபெற்று வந்த மற்றைய சேவைகள் 10-30 மணிக்கும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

## ஞானவைரவர் 8-ம் திருவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

வண்ணார்பண்ணை நல்லதண்ணீர்கிணற்றடி ஞானவைரவர் கும்பாபிஷேக 8-ம் திருவிழா வைபவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு விசேஷ அபிஷேகத்துடன் ஆரம்பமாகிறது.

6ம் பக்கம் பார்க்க

## இன்று

யாழ்ப்பாணம், வியாழன்

காரைநகர் திக்கரை ஸ்ரீ முருகமூர்த்தி கோவில் ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இன்று காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளது. இரண்டரை லட்சம் ரூபாய் செலவில் புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது. இன்று மாலை இன்னிசையும் சொற்பொழிவும் நடைபெறும்.


**Regal** (Jaffna)
Daily 4-45, 7-00 9-30 p. m.
HORST BUCHHOLZ in
NINE HOURS TO RAMA

ஸ்ரீதர் சினிமா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
THE CAT 'O' NINE TAILS
வெகு விரைவில் MAGNUMFORCE (Cinemascope)

யாழ் - ராணி சினிமாவில்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.—ஜெயலலிதா
முத்துராமன்—நம்பியார்
நடித்த
ஒரு தாய் மக்கள்

றியோ (யாழ்.நகர மண்டபம்)
தினசரி 10-30, 2-00, 4-45, 7-15, 9-45






ஆபிரிக்காவின் இரகசியக் [illegible] காடுகள்
(சினிமாஸ்கோப் கலர்)
இதுவரை வெளி [illegible] வராத அதி உன்னத [illegible] வாழ்க்கைச் சித்திரம்.
50-க்கு மேற்பட்ட மாணவர் குழுவிற்கு [illegible] தலா ரூபா 1/-

நாகம்ஸ் [சுன்னாகம்]
தினசரி 6-30, இரவு 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
சிவாஜி - சாவித்திரி
படித்தால் மட்டும் போதுமா

சாந்தி (சங்கானை)
தினசரி 6-30, இரவு 9-30
ஞாயிறு பி. ப. 2-30
TULIKA
சிங்களத்திலும் தமிழிலும்
வி.வெ.ச.4-15 ஞா.10-30
CARRY ON ROUND THE BEND

ஸ்ரீ கிருஷ்ணா [பண்டத்தரிப்பு]
தினசரி 6-30, இரவு 9-30
ஜெய்சங்கர் - விஜயா
நடித்த
மகனே நீ வாழ்க

வெஸ்லி [மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
சந்திரோதயம்

4-வது ஜனத்திரள் வாரம்!
ராஜா - (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
இதுவரை எந்தப் படத்துக்குமில்லாத பெண்கள் கூட்டம்.
சிவாஜி, உஷாநந்தினி, முத்துராமன், ஏ. சகுந்தலா, சோ, மனோரமா,
'பொன்னூஞ்சல்'

மகத்தான 2-வது வாரம்
யாழ். மனோஹரா திரையில்
தினசரி காலை 10-30, பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 10-00
ஜெய்சங்கர் - கே. ஆர். விஜயா - சோ - ஏ. சகுந்தலா
சுந்தரராஜன் - மனோகர் - வி. கே. ராமசாமி
மற்றும் பலர் நடித்த
★ வாயாடி ★
கதை, வசனம், டைரக்ஷன்: மதுரை திருமாறன்
பாஸ்களும் சலுகைகளும் ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

வெலிங்டன் (யாழ்நகர்)
தினசரி
பி. ப. 2-30, மாலை 6-30
இரவு 9-30, சனி, ஞாயிறு
காலை 10-30
இது ஒரு வழக்கமான கதை அல்ல:
முற்றிலும் மாறுபட்ட கதை.
தனக்குரிய மனைவியை, தான் அடையவேண்டிய
அன்புச் செல்வத்தை தேடிப் புறப்படும்
ஒரு கோடீஸ்வரனின் கதை
அரு குணங்கள் கொண்டவனாம் ஒரு மானை
அரவணைத்த [illegible]—அவன்தான்....
ராமன் தேடிய சீதை
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நம்பியார் - அசோகன் - நாகேஷ் - மனோரமா
டைரக்ஷன்: ப. நீலகண்டன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்

லிடோ [யாழ்ப்பாணம்]
ஷர்மிலா தாகூர், ராஜேந்திரகுமார்
நடித்த
தினசரி 4 காட்சிகள்
தலாஷ் (TALASH)
(ஈஸ்ட்மன் வர்ண ஹிந்திச் சித்திரம்)

உங்கள் உள்ளங்களை மகிழ்விக்க
இன்று (11-7-74) முதல் விஜயம் செய்துள்ளாள்!
யாழ் - வின்ஸர் வெண்திரையில்
அசோக் பிக்சர்ஸ் அளிக்கும்
வந்தாளே மகராசி
தினசரி 4 காட்சிகள்
★ ஜெய்சங்கர் ★ டி. கே. பகவதி
★ வி. எஸ். ராகவன் ★ சோ
★ ஜெயலலிதா (இரு வேடங்களில்) ★ புஷ்பலதா
★ எம். என். ராஜம்
நடித்தது
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்:
இயக்குநர் திலகம் கே. எஸ். கோபாலகிருஷ்ணன்
பாடல்கள்: வாலி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

உண்மையான திறமை ஆழமான ஆற்றைப் போன்றது; ஓட்டமிருந்தாலும் சலசலப்பிருப்பதில்லை.

—அறிஞர்.

ஈழநாடு
EELA NADU
11-7-74

## வளாக வேலைகள்

யாழ்ப்பாண வளாகத்தின் திறப்பு விழா ஆகஸ்ட் மாதத்திலிருந்து அக்டோபருக்கு பின் போடப்பட்டது மக்கள் மனதில் ஒரு சந்தேகத்தைக் கிளப்ப வல்லது. காரணம் பரமேஸ்வராக் கல்லூரியில் வளாகம் அமைக்க எடுத்த முயற்சிகளின் பழையவரலாறும்.

வடக்கா, கிழக்கா, தமிழா, இந்துவா போன்ற பல பிரச்னைகள் கடந்த காலத்தில் மலிந்திருந்தன. முடிவு காரியம் தடைப்பட்டதே. இந்த அனுபவம் மக்களுக்கு ஒரு நல்ல படிப்பினையாகவிருக்கின்றது. வளாகம் அமைத்தே திரவேண்டுமென்பது முடிந்த முடிபாகத் தெரிகின்றது. அரசாங்கமும் வழுவழுப்பான பேச்சைக் கைவிட்டு செயலில் இறங்கியுள்ளது.

இதைக் கருத்திற் கொண்டே முட்டுக்கட்டைகள் எதுவும் இருக்கப்படாதென்ற எச்சரிக்கையை விடுத்துணிந்தோம். மௌனமருந்தை நாம் சிபார்சு செய்தபோது நூற்றுக்கு நூறு வெற்றியை எதிர்பார்க்கவில்லை. நல்லகாலம், கருத்து வேறுபாடுகள் தெரிவித்த ஸ்தாபனங்களும் கண்டனமோ எதிர்ப்போ தெரிவிக்கவில்லை.

"கன்றுடைப்பு" வளாகம் கூடாதென்பதே தமிழர் கூட்டணியின் கருத்தாகும். இதில் தவறு எதுவும் இல்லை. பேராதனை, கொழும்பு, போன்ற வளாகமே யாழ்ப்பாணத்திலும் அமைய வேண்டுமென்பதை விளக்கத் தேவையில்லை. இவ்வளவு பிரச்னைக்கிடம் வைத்த வளாகம் பூரண வளர்ச்சியடையாவிட்டால் அதன் பயனென்ன. இப்பகுதி மக்களின் தேவைகளையும் அபிலாஷைகளையும் நிறைவேற்றும் நோக்கத்துடன் அமைக்கப்படும் ஸ்தாபனம் கண்டுடைப்பாயிருப்பதை யார் விரும்புவார்?

வளாக ஆக்கவேலைகளுக்கு ஊக்கமளிப்பதே வடபகுதி மக்களின் தலையாயகடன். நூற்றுக்கணக்கான திறமைசாலி மாணவர்கள் தகைமையிருந்தும் இடமில்லாமல் தெருவழியே திரிகின்றார்கள். தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் - தகுதி வாய்ந்த யாவருக்கும் இடவசதி அவசியம். அதனுடன் யாழ். வளாகம் வசதி குறைந்த தமிழ் மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். எனவே வளாக வேலைகள் துரிதப்படுத்துவதற்கான தூண்டுதல் தொடர்ந்திருக்கவேண்டும்.

நல்ல தொடக்கமதிலேயே ஒரு பெருமுயற்சி யின்பாதி முடிவடைந்துவிடும். வளாகம் எவ்வாறு வளரவேண்டும்? யார் தலைவராக அமையவேண்டும்? என்ன கல்வித் துறைகள் அமைக்கவேண்டும்? எம்மொழி பேசுவோர் மாணவர்களாக அனுமதிக்கப்பட வேண்டும்? இவைபெல்லாம் முக்கிய கேள்விகள். இவற்றின் விடைகளில் வேறுபாடு இருக்கலாம். ஆனால் வேறுபாடு இருக்க முடியாதவிஷயம் ஒன்றே ஒன்று: அக்டோபரில் பிரதமர் திறந்துவைக்கவிருக்கும் வளாகத்துக்கு எவ்வித இடையூறும் ஏற்படுத்தாம லிருப்பது இப்பகுதி மக்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

பலவிதர கருத்துக்களைச் சற்றே மறந்து 'சந்திரனைக் கொண்டுவா' போன்ற கோரிக்கைகளைக் கைவிட்டு, பூரண ஒத்துழைப்பை நல்குவதே அக்டோபரில் வளாகம் உதயமாவதற்குகந்த வழியாகும்.

## இன்றைய பலன்

ஆனிமாதம் 27-ந் திகதி (11-7-74)

**மேஷம்:** மனை வாழ்வில் மகிழ்ச்சிகரமான திருப்பம் ஏற்படும். குழந்தைகளின் முன்னேற்றம் திருப்தியை அளிக்கும்.

**ரிஷபம்:** ஏமாற்றத்தின் எதிரொலி பழிவாங்கும் உணர்ச்சியைத் தூண்டும் எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும்.

**மிதுனம்:** பேச்சுவன்மையால் பிறருடைய நன்மதிப்பைப் பெறுவீர்கள். சிலருக்கு அதிர்ஷ்டலாபமும் கிடைக்கலாம். சிறப்பான தினம்.

**கடகம்:** புத்திரவழியால் புகழ்வந்து சேரும் வெளியூர் பயணமும் உண்டு. குடும்பத்தில் சுமுகமான நிலை தென்படும்.

**சிம்மம்:** நீண்டநாள் உறவில் முறிவு ஏற்படலாம். கடமையாற்றுமிடத்தில் சகாக்களுடன் சச்சரவுகளைத் தவிர்த்துக்கொள்ளவும்.

**கன்னி:** எண்ணம் போல் வாழ்வு, இன்றுமலரும் மற்றவர்கள் மெச்சும் வண்ணம் கடமையாற்றுவீர்கள். வேண்டியவர்களின் ஆதரவு பெருகும்.

**துலாம்:** உறவுமுறைகளில் பிளவுகள் தென்படும் மனதில் உற்சாகம் குன்றும் அபாயகரமான காரியங்களில் ஈடுபடாது இருக்கவும்.

**விருச்சிகம்:** தருமகாரியங்களில் தாராளமாக ஈடுபடுவீர்கள். சுற்றுடலில் மதிப்பு உயரும். தெய்வத்தின் துணை உண்டு.

**தனுசு:** குடும்பத்தில் சுமுகமான நிலை தென்படும்; புதிய தொடர்புகள் ஏற்படும் அதன் வழி முன்னேற்றமும் மகிழ்ச்சியும் தென்படும்.

**மகரம்:** வரவில் உயர்வு காணும் வாழ்க்கையில் முன்னேற்றம் தென்படும் அயலவர்களின் வாழ்த்தும், அவசியம் கிடைக்கும்.

**கும்பம்:** நெஞ்சமும் புண்ணாகி நெடுமூச்சு வெளிக்கிளம்பும். தொழிலாலே தொல்லை தோன்றும். இறைவழிபாடு நன்று.

**மீனம்:** அடிசறுக்கும் நிகழ்ச்சி இன்று இடம் பெறலாம். ஆணவத்தை அடக்கின் அமைதிக்கிடமுண்டு.

சோதிடக்கலாநிதி,
திருமலை க. வேலுப்பிள்ளை

## பம்ப்களவாடியதாக இருவர் கைது

மாவிட்டபுரம், புதன்

நீரிறைக்கும் இயந்திரத்தை களவாடி விற்கமுயன்றதாகப் பொலிசாரினால் கைது செய்யப்பட்ட இரு நபர்களை தலா 500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார் மல்லாகம் நீதிபதி.

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த ச. கந்தசாமி என்பவரது நீரிறைக்கும் இயந்திரத்தைக் களவாடி சுன்னாகத்திற்கு கொண்டுபோய் விற்கும் சமயம் சுன்னாகம் பொலிசாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து மேற்படி இயந்திரத்தையும், அதை விற்றுக் கொண்டிருந்த இ. இராசதுரை, ம. புஷ்பநாதன் ஆகிய இருவரையும் கைதுசெய்தனர்.

சுன்னாகம் பொலிசார் இவர்களை காங்கேசன்துறைப் பொலிசாரிடம் ஒப்படைத்ததையடுத்து காங்கேசன்துறைபொலிஸ் குற்றத்தடுப்பு இன்ஸ்பெக்டர் கே. ஆர். இராமச்சந்திரன் அவர்களை மல்லாகம் நீதிபதி முன் ஆஜர் செய்தார்.

அச்சமயம் இருநபர்களும் தாம் சுற்றவாளிகள் எனக் கூறியதையடுத்து நீதிபதி திரு. டி. யேசுரத்தினம் இருவரையும் தலா 500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து வழக்கை அடுத்தமாதம் 26ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இவ்வழக்கில் எதிரிகளுக்காக சட்டத்தரணிகள் ஆர். ஜே. செல்வரத்தினம், சிவஸ்ரீதரன் ஆகியோரும் பொலிஸ் தரப்பில் இன்ஸ்பெக்டர் கே. ஆர். இராமச்சந்திரனும் ஆஜரானார்கள்.

---

புங்குடுதீவு, புதன்

காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மேலும் மூன்றுபுதிய கிளைகளை நிறுவ முன்வந்துள்ளது. இதற்கமைய கடந்தவாரம் காரைநகர் மேற்கு வாரிவலவிலும், நீலிப்பந்தனையிலும் இருபுதிய கிளைகள் திறந்துவைக்கப்பட்டன. பிரஸ்தாப சங்கத் தலைவரும் வட்டுக்கோட்டை எம். பி. யுமான திரு. ஏ. தியாகராசா இக்கிளைகளைத் திறந்துவைத்தார். புதிய மூன்றாவது கிளை காரைநகர் களபூமி பாலாவோடையில் விரைவில் திறந்துவைக்கப் படவுள்ளது. [ந]

---

## சைக்கிளுடன் போனவர் திரும்பவில்லை

மாவிட்டபுரம், புதன்

வீட்டில் வந்து தங்கிய உற்ற நண்பரான நபர் ஒருவர் வீட்டுக்காரரின் சைக்கிளை இரவலாக வாங்கிக் கொண்டுகம்பி நீட்டிவிட்டாராம். இப்படியான சம்பவம் ஒன்று மாவிட்டபுரத்தில் இடம் பெற்றுள்ளது.

மாவிட்டபுரத்தைச்சேர்ந்த என். நித்தியானந்தம் என்பவரதுவீட்டில் அவரது உற்ற நண்பரான முன்னாள் வங்கி ஊழியர் ஒருவர் வந்து தங்கியிருந்துவிட்டு கடைக்குப்போவதற்கு சைக்கிளைத் தருமாறு கேட்டு வாங்கிக் கொண்டு சென்றவர் பின்னர் வீட்டுக்குவரவில்லையாம்.

இது குறித்து வீட்டுக்காரர் காங்கேசன்துறை பொலிசில் புகார் செய்ததையடுத்து காங்கேசன்துறைப் பொலிசார் சந்தேக நபரைத்தேடி வருகின்றனர்.

5-ம்பக்கத் தொடர்ச்சி

மாலை 5-30 மணிக்கு தமிழ்மணி என் கணேசரத்தினத்தின் கூட்டு வழிபாடு இடம் பெறும். இரவு 7 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாதத்தம்பிரான் சுவாமிகள் "திருத் தொண்டத்தொகை" என்னும் பொருள் பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். பின்னர் வண்ணை எம். [illegible] பழனிவேல் ஆகியோரின் மேளக்கச்சேரி இடம் பெறும்.

## ஜெயராஜன் எழுதுவது

கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியார், யாழ்ப்பாணத்தில் ஓர் அன்பருக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தைப் பார்த்தேன்.

1000 திருமுறைப் பாடல்களை முறைப்படுத்தி ஆங்கிலத்திலும் ஆக்கி இருப்பதாயும் 'மிஸ்டிக் டிரஹர்' (திருவருட் செல்வம்) என்ற பெயரால் வெளியிடவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தேவாரம் தமிழில் இருப்பினும் நம்மில் பலருக்கு அதன் பொருள் விளங்குவதில்லை. சொல்லிய பாட்டின்பொருள் உணர்ந்து சொல்லுவதற்காக திருமுறைப் பாடல்களுக்குப் பொருள் எழுதி தருமபுரம் ஆதீனத்தார் வெளியிட்டுப் பெரும்பணி செய்துள்ளனர். தமிழறியாதவரும் இதனால் பயன்பெற கவியோகி அவர்கள் அவற்றில் சிலவற்றை ஆங்கிலப்படுத்தி ஆக்கியுள்ளது, மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் பரவ உதவ வேண்டும்.

பல நாடுகளில் தமிழில் தேவாரம்பாடியதும், அவரது ஆங்கில மொழிபெயர்ப்பையும் படிக்கின்றனராம். இதை விரைவில் அச்சிடவேண்டும் என்று விருப்பம் தெரிவித்துள்ளார்.

அவர் ரோமில் ஒரு மாதம் இருந்து போப்பின் அன்பிலும் கத்தோலிக்க வழிபாட்டில் கலந்து மகிழ்ந்ததாகக் கூறி, "ஏழுமலைகளுக்கிடையே அழகிய திருவூர்வாடிகன். அம் மலைகளில் பிரான்ஸிஸ் முனிவர் தவம் புரிந்த குகையில், நானும் தியானித்தேன். அந்த மாதிரி ஊர்தோறும் வழிபாட்டாலயம் அமைத்து மணி அடித்தும் அடியார்கூடி இறைவனை வழுத்தி வழிபடும் ஒழுக்கமுறை ஏற்படவேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார். அவரது இந்தப் புனித கனவு நனவாக வேண்டும்.

"நமது சைவம்" என்ற தலைப்பில் சில அருமையான பாடல்களை அவர் பாடியுள்ளதை கடிதத்தில் எழுதும் போது கண்ணீர்சிந்தியதாம். அப்பாடல்களை இங்கே தருகிறேன்.

நமது சமயம் சைவசமயம்
நாவல்மாரின் சமயம்
நமச்சிவாயஓம் சிவம்என
நல்ல தொண்டர்
செல்வோம்
ஞாலம் அறிய வெல்வோம்
நமது சமய நன்மையினை
நானிலத்தும் சொல்வோம்
நாவரசர் திருதேவாரத்தை
நாளும் ஓதிநடப்போம்
தேவர் குறளும்
திருவாசகமும்,
திருமந்திரமும் படிப்போம்
படித்தபடியே நடப்போம்
(நமது)
சரியை கிரியை யோகஞான
சாதனங்களைப் புரிவோம்
அரிய சிவன் சிவமயமாகும்
அமரக்கலையைப்
பயில்வோம்
அருளை அடைய முயல்வோம்
(நமது)
ஆத்ம வித்யா வேதத்துவம்
அனைவர் உள்ளும் புறமும்
பாத்திரமாகிப் பணிந்து
பரவின்
பரனருட்கனல் பரவும்
பரமன் சக்தி பரவும்
அன்புகலந்தே அருள்
கனிந்தே
இன்பரசம் பொழியும
(நமது)
ஒன்றே கடவுள் ஒன்றே
உள்ளம்
ஒரு குலம் உயிர்த்
தொகையே
உள்ளக்கோயில்
தெள்ளத் தெளிந்தார்
உள்ளான்மாவே சிவமயம்.
தன்மை யான்ம ஒருமைகூடி,
நலமே நாடி வாழ்வோம்
ஞாலம் முழுதும்
ஆலயம் என்று
ஞானசேவை சூழ்வோம்.
(நமது)
ஓம் நமச்சிவாயவென்றே
உள்ளம் துள்ளப்பாடி
தீந்தமிழும் சைவமதமும்
திகழ நாளும் உழைப்போம்
செகத்தையெல்லாம்
அழைப்போம். (நமது)

## சிறப்பாக நடக்கும் மாவை கந்தன் ஆலய உற்சவம்

மாவிட்டபுரம், புதன்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் உற்சவம் மிகவும் கூடுதலான பக்தர்கள் கலந்து கொள்ள மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

சரித்திரப் பிரசித்தி பெற்ற மாவைக் கந்தன் ஆலய உற்சவத்தில் இவ்வருடம் பெருந்தொகையான பக்தர்கள் தினமும் கலந்து கொள்கிறார்கள். எதுவித அசம்பாவிதங்களுமின்றி உற்சவம் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

ஆலயத்தில் கூடும் பக்தர்களின் சுகாதார வசதிகளை சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்டுள்ளனர். பக்தர்களின் பாதுகாப்புக்காக பொலிசாரும் ஆலயத்தின் சுற்றுப்புறத்தில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேற்படி ஆலய கார்த்திகைத்திருவிழா எதிர்வரும் 15-ம் திகதி நடைபெற உள்ளது. அன்றுதொடக்கம்தேர், தீர்த்த விழாவரை பெருந்தொகையான பக்தர்கள் மேற்படி ஆலயத்தில் கூடுவதால் அவர்களுக்கான பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொள்ள ஆலய வீதியில் தற்காலிக பொலிஸ் நிலையம் ஒன்று கார்த்திகைத்திருவிழா தொடக்கம் இயங்க இருக்கிறது.

ஆலய சுற்றுடலை சுத்திகரித்து, நீர்தெளித்து புனிதமாக வைத்திருக்க காங்கேசன்துறைப்பட்டின சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜூலை 18ம் திகதி மேற்படி ஆலய பஞ்சரத உற்சவம் நிகழ இருப்பதால் அந்நிகழ்ச்சிகளை இலங்கை வானொலியில் ஒலிபரப்பவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 19ம் திகதி ஆடி அமாவாசை தீர்த்த விழா கீரிமலையில் நடைபெறும்.

மேற்படி ஆலய 13 வது உற்சவம் தொடக்கம் கிதை தமிழ்ச் செல்வி. பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி கந்தபுராண தொடர் விரிவுரை நிகழ்த்திவருகிறார். 10 தினங்கள் இவ் விரிவுரை நடைபெற்று 23ம் திருவிழாவன்று பூர்த்தியாகும். இவ் விரிவுரையை தினமும் ஏராளமானோர் கேட்டின்புற்று வருகிறார்கள்.

## சிவகுமாரனுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உபசபாநாயகர் திரு மு. சிவசிதம்பரம், சாவகச்சேரி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம், திரு. க. தங்கராஜாசிங்கம் ஆகியோரும் இக்குழுவில் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெல்லவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் [illegible] ஜூலை 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The [illegible] P. O. Box No. 49, Jaffna. Telegrams "[illegible]" Telephone: 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org